# In the Court of the Principal District Munsif, Padmanabhapuram.

O.S.No.87/2022 தேதி- 16.03.2026
(DW.1) – ஜாண்பாஸ்கோ

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை-**

1. இந்த வழக்கின் மூன்றாவது பிரதிவாதியின் கணவர் என்றால் சரிதான். நான் இந்த வழக்கில் கட்சி இல்லை என்றால் சரிதான். எனக்கும் மூன்றாவது பிரதிவாதிக்கும் எப்போது திருமணம் நடந்தது என்றால் 1987 ல் ஆகஸ்ட் 17 ல் நடைபெற்றது. என்ன வேலை செய்து வருகிறேன் என்றால் ஓட்டுநராக பணிபுரிந்து வருகிறேன். எனது சொந்த ஊர் என்ன என்றால் புதுக்கடையாகும். அரசு ஓட்டுநராக பணிபுரிந்து வருகிறேனா என்றால் இல்லை, காரை வைத்து தனியாக ஓட்டுநராக பணிபுரிந்து வருகிறேன்.

2. எனக்கு வாதியையோ, வாதியின் குடும்பத்தையோ, அவர்களின் சொத்தை பற்றியோ என் திருமணத்திற்கு முன்பு தெரியுமா என்றால் தெரியாது. 2 ஆம் பிரதிவாதி என் மனைவியின் மூத்த சகோதிரி என்றால் சரிதான். 2 மற்றும் 3 வது பிரதிவாதிகளுக்காக நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். இந்த வழக்கை வாதி என்ன பரிகாரம் கோரி வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் விளம்புகை மற்றும் உறுத்து கட்டளை பரிகாரங்கள் கோரி வழக்கை தாக்கல் செய்துள்ளார்.

3. என் மனைவிக்கும், 2 வது பிரதிவாதிக்கும் உடல்நலகுறைவு என்று சொல்லியுள்ள நிலையில் என் மனைவிக்கு என்ன உடல்நலகுறைவு என்றால் என் மனைவிக்கும் மூட்டு வலியாகும். அவர்கள் எங்கு சிகிச்சை பெற்று வருகிறார் என்றால கிம்ஸ் மருத்துவமனையில் 2 வருடங்களாக சிகிச்சை பெற்று வருகிறார். மேற்சொன்ன சங்கதிகளை நிரூபிக்க ஆவணம் எதுவும் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை.

4. 2 வது பிரதிவாதிக்கு வயது என்ன என்றால் 70 வயதாகும். 2 மற்றும்3 பிரதிவாதிகள் அருகில் நடைபெறும் விசேஷங்களுக்கு சென்று வருகிறார்கள் என்றால் என் மனைவி சென்று வருவார், 2 வது பிரதிவாதி வயது முதிர்வின்

காரணமாக எங்கும் செல்வதில்லை. 2 மற்றும் 3 பிரதிவாதிகள் நல்ல உடல்நிலையில் தான் உள்ளார்கள் என்றாலும், அனைத்து விசேஷயங்களுக்கும் சென்று வருகிறார்கள் என்றால் சரியல்ல. 2 வது பிரதிவாதிக்கும் உடல்நிலை சரியில்லை என்று நிரூபிக்க ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

5. எனக்கு இந்த வழக்கை பற்றியோ, வழக்கு பட்டிகை சொத்தினை பற்றியோ எனக்கு நேரடியாக எதுவும் தெரியாது என்றால் சரியல்ல, என் மனைவி சொல்லி தெரியும். பட்டிகை சொத்தை நான் தான் விலைக்கு வாங்கினேன். எனக்கு நேரடியாக தெரியும் என்று வழக்கிற்காக பொய்யாக சொல்லுகிறேன் என்றாலும், என்னுடைய நிரூபன வாக்குமூலத்திலேயே மூன்றாவது பிரதிவாதியான என் மனைவி சொல்லி தான் தெரியும் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல.

(வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணையின் தொடர்ச்சிக்காக வேறு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது).